செய்தி வெளியீடு எண்:133 நாள்:17.02.2021

# செய்தி வெளியீடு

சென்னையில் உள்ள பசுமைவழிச் சாலையில் இயங்கி வரும் அகில இந்தியக் குடிமைப் பணித் தேர்வுப் பயிற்சி மையம், கடந்த 54 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. இந்த மையத்தின் சார்பில் தமிழக இளைஞர்கள் பயன்பெறும் வகையில் அகில இந்திய குடிமைப் பணிகளுக்கான முதனிலைத் தேர்வுக்கான இணைய வழி வகுப்புகள் 08.02.2021 அன்று முதல் பின்வரும் அட்டவணையின்படி நடைபெற்று வருகின்றது:

10.15 மணி முதல் 11.30 மணி வரை– முதல் பாட நேரம்

11.45 மணி முதல் 1.00 மணி வரை – இரண்டாவது பாட நேரம்

2.00 மணி முதல் 3.15 மணி வரை – மூன்றாவது பாட நேரம்

3.30 மணி முதல் 4.45 மணி வரை – நான்காவது பாட நேரம்.

முதனிலை பாடத்திட்டத்தின் அடிப்படையில் இந்திய வரலாறு, தேசிய விடுதலைப் போராட்டம், புவியியல், அரசியல், பொருளாதாரம், அறிவியல், சுற்றுச்சூழல், நடப்பு நிகழ்வுகள் ஆகிய பொருண்மைகளில் பாடங்கள் நடைபெற்று வருகின்றன.

எனவே, ஆர்வமுள்ள மாணவர்கள் இவ்வாய்ப்பினை நேரடி இணைய வழி வகுப்பு மற்றும் AICSCC TN என்ற ''காட்சி ஊடகப் பாதை'' (YouTube Channel) மூலம் பயின்று பயன் பெறுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

தமிழகத்தின் எந்த மூலையில் இருந்தாலும் நேரடிப் பயிற்சி பெற முடியாதவர்கள் பார்த்தும் கேட்டும் பயன்பெறவே இத்தகைய வசதி ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதை பணிக்குச் செல்பவர்களும் பிற மாநிலங்களில் வசிக்கும் தமிழர்களும் தங்கள் ஓய்வு நேரத்தில் பார்த்து பயனடைய முடியும்.

வெ.இறையன்பு
கூடுதல் தலைமை செயலர்/ இயக்குநர்
பயிற்சித்துறை தலைவர்

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**